1971 டிசம்பர் 15]

திரு. என். டென்னிஸ் : சார், பணிபுரியும் தாய்மார்கள் அதிகரித்துள்ளதால் இம்மாதிரியான நிலையத்தை அமைத்தால் அவர்கள் வேலையில் முழுக்கவனத்துடன் ஈடுபட வழிவகுக்கும் என்பதை அரசு கருதுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் தாய்மார்களிடமிருந்து இப்படிப்பட்ட மனுக்கள் ஏதும் இதுவரையில் வரவில்லை. அப்படியே வரப்பெற்றாலும் தலைமைச் செயலகம் தலைமைச் செயலாளர் அவர்கள் கண்காணிப்பிலே இருப்பதால் அவர்கள்தான் ஏற்பாடு செய்ய வேண்டும். மகளிர் நலத்துறை செய்வதற்கு நியாயம் இல்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, பணிபுரியும் தாய்மார்களுக்காவது பரவாயில்லை, விடுமுறை எடுத்துக்கொண்டு வீட்டில் இருந்துவிடலாம், ஆனால் இருகோடுகள் சினிமாவில் வரும் நாகேஷ் போன்ற சில தந்தைமார்கள் மனைவியை இழந்தவர்களாய் குழந்தைகளைக் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்களே, அப்படிப்பட்ட குழந்தைகளுக்காவது அரசாங்கம் ஏதாவது வழி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இருகோடுகள் என்பதுபோல பல கோடுகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட தாய்மார்கள் இருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கு அரசு நல்ல திட்டங்களை வைத்து அரசு பராமரித்துக்கொண்டு வருகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Have the Government got any scheme of opening creches in those factories where women are working in large numbers?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த ஃபேக்டரிகளே அப்படிப்பட்ட விடுதிகளைத் தொடங்க வேண்டுமென்று அரசு கருதுகிறது.

Ready-made Garments Unit at Tambaram

* 414 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to open any Ready-made Garments Unit at Tambaram by the Women's Welfare Department; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) தாம்பரம் பணி இல்லத்துடன் இணைந்துள்ள தையற்கலைப்பிரிவில் சான்றிதழ் பெறுபவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் ஆடை தயாரிப்புப் பிரிவு ஒன்றை மேற்படி இல்லத்தில் தொடங்குவது குறித்து மகளிர் நலத்துறை இயக்குநர் அனுப்பிய செயற்குறிப்புக்கு அரசு 1971 ஆகஸ்ட் திங்களில் ஒப்பளிப்பு வழங்கியது.